கிழக்கு மாகாண நிருவாக சுற்றறிக்கை இல. DCS(A)/01/2014

எனது இல. EP/02CB/D
பிரதிப் பிரதம செயலாளர் ~ நிருவாக அலுவலகம்
கிழக்கு மாகாணம்
திருகோணமலை
01.01.2014

சகல செயலாளர்கள் / திணைக்களத்தலைவர்களுக்கும்
கிழக்கு மாகாணம்

**<u>கிழக்கு மாகாண சபையின் சுற்றுலாவிடுதியின் தங்குமிட வசதிகளை அரச உத்தியோகத்தர்கள் பயன்படுத்துதல்</u>**

1. கிழக்கு மாகாண சபையின் பின்வரும் இடங்களில் அமைந்துள்ள சுற்றுலாவிடுதியின் தங்குமிட வசதிகளை கிழக்கு மாகாண அரச சேவை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் கிழக்கு மாகாண சபையை சாராத ஏனைய அரச உத்தியோகத்தர்களும் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

i. **தெஹிவளை தங்குமிட வீடுதி**
இல. 3 பெயர் லைன் வீதி
தெஹிவளை

ii. **அத்துருகிரிய சுற்றுலா வீடுதி**
இல.143, 1ம் ஒழுங்கை,
மிலேனியம் சிட்டி, அத்துருகிரிய.

iii. **உப்புவெளி சுற்றுலா வீடுதி**
உப்புவெளி,
திருகோணமலை.

உ.

I. சகல விடுதிகளுக்குரிய முற்பதிவுகளுக்கான கோரிக்கைகள் யாவும் அலுவலக நேரங்களில் பிரதிப் பிரதம செயலாளர்– நிருவாகம் அலுவலகத்தினூடாக மாத்திரம் மேற்கொள்ளப்படும். எக்காரணம் கொண்டும் நேரடியாக தங்குமிடங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியாது. மேலும் பின்வரும்
தொலைபேசி இலக்கம் – 071 – 6037698
தொலைநகல் இலக்கம் – 026 – 2227161
என்பவற்றினூடாகவும், மற்றும் கிழக்கு மாகாண சபையின் இணையத்தளத்தினூடகவும் (www.ep.gov.lk) பதிவுகளை மேற்கொள்ள முடியும். முற்பதிவுகளில் கிழக்கு மாகாண அரச சேவை உத்தியோகத்தருக்கு முன்னுரிமை வழங்கப்படும்

(முற்பதிவு விண்ணப்படிவம் இல EPPA/01/2014-A இணைக்கப்பட்டுள்ளது )

3. முற்பதிவுகள் இரத்துச்செய்யவேண்டுமாயின் ஆகக்குறைந்தது ஒரு நாளுக்கு முன்னர் பிரதிப் பிரதம செயலாளர்– நிருவாகம் அலுவலகத்திற்கு அறியத்தரல் வேண்டும். அவ்வாறன்றில் விண்ணப்பதாரியினால் முழுக்கட்டணமும் செலுத்தப்பட வேண்டும்.

4. பதிவுகள்யாவும் நாளாந்த அடிப்படையிலேயே (காலை 6 மணியிலிருந்து அடுத்த நாள் காலை 6 மணி வரையே) செல்லுபடியாகும்.

5. அரச சேவை உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்கள் மாத்திரம் உத்தியோகத்தருடன் தங்குவதங்கு அனுமதிக்கப்படுவார்.

6. உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் தமது பெயர்களில் பதிவு செய்து வேறுநபர்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டர்கள்.

7. தங்குவதற்கு விடுதிக்கு வரும் அனைவரும் வருகைத்தினத்தன்றே தங்குவதற்கான முழுக்கட்டணமும் செலுத்தி விடுதிக்கு பொறுப்பானவரிடம் இருந்து பற்று சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும்

8. விடுதியை பாவிப்பவர்கள் கௌரவத்துடனும் கண்ணியத்துடனும் மற்றவர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தாத வண்ணம் அரச சேவைக்கு அபகீர்த்தி ஏற்படாத வகையிலும் நடந்து கொள்ளல் வேண்டும்.

9. தங்குமிட விடுதிகளை பாவிப்பவர்கள் தாங்கள் கொண்டுவரும் பொருட்களை தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் தொலைந்து போகும் அல்லது சேதமாகும் பொருட்களுக்கு நிருவாகம் பொறுப்பேற்காது.

10. விடுதியிலுள்ள அரச உடமைகளையும் சொத்துகளையும் கவனமாக பாவித்தல் வேண்டும். அழிவு அல்லது சேதம் ஏற்படும் இடத்து உரியவர்களிடமிருந்து நட்டம் ஈடுசெய்யப்படும்.

11. தங்குமிடங்களிலுள்ள முறைப்பாட்டு பெட்டிகளில் விடுதி தொடர்பான ஆலோசனைகளை, முறைப்பாடுகளை இடலாம். முறைப்பாடு செய்பவர்கள் தனது பெயர், அலுவலக முகவரி என்பவற்றை குறிப்பிடல் வேண்டும்.

12. தங்குமிட வசதிகளை பாவிப்பவர்கள் அங்கு தங்கியுள்ள போது அவர்கள் தொடர்பாக ஏதேனும் முறைப்பாடு கிடைக்கப்பெறின் எதிர்காலத்தில் அவர்களது தங்குமிட கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

தயவுசெய்து மறுபக்கம் பார்க்கவும்..

13. **விடுதியின் நாளந்த கட்டண விபரமும் –**

1. **தெஹிவளை தங்குமிட விடுதி**

**I. அறைகளின் விபரம்**

- குடும்ப அறை – 1 (நான்கு கட்டில்கள் கொண்டது.)
- தனிக்கட்டில்கள் – 20

**II. கட்டண விபரங்கள்**

a. குடும்ப அறை – 1000/=
b. தனிக்கட்டில் (Single bed) – 300/=
c. வாகனச்சாரதி, அலுவலகப்பணியாளர்கள் தங்குவதற்கு – 150 /=
வாகனத்தரிப்பிடம் ஓர் இரவுக்கு – 250/=
d. 10 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு – 100/=
(கட்டில் வழங்கப்பட மாட்டாது)
e. அயன்பொக்ஸ் பாவனைக்கு ஆடை ஒன்றுக்கு – 20/=
f. இளைப்பாறி செல்வதற்கு ஆகக்கூடியது மூன்று மணித்தியாலங்கள் – 150/=
(மு.ப 4.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரை)

2. **அத்துருகிரிய சுற்றுலா விடுதி**

**I. அறைகளின் விபரம்**

- எட்டு அறைகள் – ஒவ்வொரு அறையும் இரண்டு தனித்தனிக்கட்டில்கள் கொண்டது.

**II. கட்டண விபரங்கள்**

a. அறை ஒன்றை முழுமையாக – 500/=
(இரண்டு தனித்தனிக்கட்டில்கள்)
b. கட்டில் ஒன்றுக்கு (Single bed) – 250 /=
c. வாகனச்சாரதி, அலுவலகப்பணியாளர்கள் தங்குவதற்கு – 100 /=
வாகனத்தரிப்பிடம் ஓர் இரவுக்கு – 200/=
d. அயன்பொக்ஸ் பாவனைக்கு ஆடை ஒன்றுக்கு – 20/=
e. இளைப்பாறி செல்வதற்கு ஆகக்கூடியது மூன்று மணித்தியாலங்கள் – 150/=
(மு.ப 4.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரை)

தயவுசெய்து மறுபக்கம் பார்க்கவும்..

3. **உப்புவெளி சுற்றுலா விடுதி**

**I. அறைகளின் விபரம்**

- எட்டு சாதாரண அறைகள் (தனித்தனி கட்டில்கள் இரண்டு)
- நான்கு குளிரூட்டப்பட்ட அறைகள்

**II. கட்டண விபரங்கள்**

a. குளிரூட்டப்பட்ட அறை (இரண்டு கட்டில்கள் முழுமையாக) – 2000/=
b. சாதாரண அறை (இரண்டு கட்டில்கள் முழுமையாக) – 1000/=
c. தனிக்கட்டில் ஒன்றுக்கு – 500/=
d. வாகனச்சாரதி, அலுவலகப்பணியாளர்கள் தங்குவதற்கு – 150 /=
(கட்டில் வழங்கப்பட மாட்டாது)
e. வாகனத்தரிப்பிடம் ஓர் இரவுக்கு – 200/=
f. அயன்பொக்ஸ் பாவனைக்கு ஆடை ஒன்றுக்கு – 20/=
g. இளைப்பாறி செல்வதற்கு ஆகக்கூடியது மூன்று மணித்தியாலங்கள் – 200/=
(மு.ப 4.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரை)

14. சுற்றுலா விடுதிகளை பாவிப்பது தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்கள் யாவும் இத்தால் இரத்துச்செய்யப்படுவதுடன் 2014.01.01 முதல் இச்சுற்று நிருபத்திற்கு அமைவாகவே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15. இச்சுற்று நிருபத்தை தங்கள் அலுவலகத்தில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் / ஊழியர்களுக்கு தெரியப்படுத்துவதுடன் அலுவலக அறிவித்தல் பலகையிலும் காட்சிப்படுத்துமாறு தயவாக கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**கலாமதி பத்மராஜா**
பிரதிப் பிரதம செயலாளர் ~ நிருவாகம்
கிழக்கு மாகாணம்